வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்
வழக்குஎண் CC 206/2021
வழக்குசாட்சி LW7/PW6

| பெயர் | சரவணன் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | பச்சையப்பன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 48 |

தேதி 16.02.2026
எதிரி ஆஜர் இல்லை.
சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.
**முதல் விசாரணை**

நான் பெரிய சேக்காட்டில் வசித்து வருகிறேன். நான் கார்பெண்டர் வேலை செய்து வருகிறேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். 5 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகமில்லை. செக்போஸ்ட் அருகே போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். சண்டை காரணமாக போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.**

கடந்த 31.03.2021 காலை 09.00 மணியளவில் சின்ன மாத்தூர் டோல்கேட் அருகே நான் சென்றுகொண்டிருந்தபோது அங்கு மாதவரம் பால்பண்ணை உதவி ஆய்வாளர் போலீசார் ஒரு நபரை பிடித்து விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அப்போது மாதவரம் பால்பண்ணை காவல் உதவி ஆய்வாளர் என்னிடம் எதிரி குமார் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் கையொப்பத்தினை செய்துவிட்டு போலீஸ் விசாரணையின்போதும் மேற்படி தகவலை கூறிவிட்டு தற்போது

**உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**